270/23

811

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.ச.ஞானம், M.Sc., M.Ed.,

ந.க.எண்.ப2/348/2022 (வளர்ச்சி)

நாள்: 06.12.2024

பொருள்: "பணியமைப்பு"- புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு- ஊராட்சி செயலர்களுக்கு 20% சதவித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2021-22ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியலின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை-2ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டது- பணிவரன்முறை செய்து உத்தரவிடல்.

பார்வை:
1.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண் 348/2022/ப2 (வளர்ச்சி) நாள்: 28.02.2023.
2.செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடித ந.க.எண் 344/கது.அ1/2024 நாள்: 14.03.2024.
3.அரசு முதன்மைச் செயலாளர், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)துறை கடித ந.க.எண் (2ப) 52 நாள்: 12.06.2024.
4.இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை கடிதம் ந.க.எண்.4042/ 2023/பி3 நாள்: 01.07.2024.
5.புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செ.மு.ந.க.எண்.348/ 2022/ப2 (வளர்ச்சி) நாள்: 16.02.2024.
6.தொடர்புடைய அலுவலகங்களிலிருந்து வரப்பெற்ற கருந்துருக்கள்.

-0-

உத்தரவு:-

புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஊராட்சி செயலர்களுக்கான 20% சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 2021-2022ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியலின்படி இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 பணிநிலையில் பணிநியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வரும் பின்வரும் பணியாளர்களுக்கு அவருக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 பணிநிலையில் பணிவரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் /பதவி/ பணிபுரியும் அலுவலகம் திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | ஆர்.பழனிவேல், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், மணமேல்குடி. | 16.07.2024 முற்பகல் | 16.07.2024 முற்பகல் |
| 2 | வி.முருகையா, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், ஆவுடையார்கோவில். | 16.07.2024 முற்பகல் | 16.07.2024 முற்பகல் |

Scanned with OKEN Scanner

மேற்காணும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப்பட்டுள்ளது. தனியர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவகாலமாக கருதப்படுவதால் நிர்ணயிக்கப்பட்ட இரண்டாண்டு காலத்திற்குள் பணிநியமன ஆணையில் குறிப்பிட்டுள்ள ஊரக வளர்ச்சித் துறை தேர்வுகள் அனைத்திலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
புதுக்கோட்டை.

பெறுநர்

தொடர்புடையவர்கள் (உரிய வழியாக)

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சைதாப்பேட்டை, சென்னை-15.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)/(கி.ஊ), மணமேல்குடி/ஆவுடையார்கோவில்.

270/2023/அ1
24.12.2024

ஊராட்சி ஒன்றியம்,
ஆவுடையார்கோவில்.

நகல் தொடர்புடையவருக்குச் சார்வு செய்யப்படுகிறது.

பெறுநர்

1. திரு வி. ரெங்கையா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம்
ஆவுடையார்கோவில்.

(அ/ந)

வட்டார வளர்ச்சி அலுவலர்
(வட்டார ஊராட்சி)
ஊராட்சி ஒன்றியம் ஆவுடையார்கோவில்

24/12/24

24/12/24